# மக்களின் முதல்வர்! தொண்டர்களின் தலைவர்! மயிலாடுதுறை வருகையும்! வரலாற்று பின்னணியும்...!



அமைதியிலும் உறுதியாய், வேகத்திலும் விவேகமாய் எனும் இனமானப் பேராசிரியரின் வரிகளுக்கு ஏற்ப பயணிக்கும் நம் உயிரினும் மேலான தலைவர் அவர்கள் கடந்து வந்த பாதையும், வரலாற்று நிகழ்வுகளும் தமிழக அரசியல் வரலாற்றில் வேறு எந்த தலைவருக்கும் இருந்ததாக தெரியவில்லை.

**கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. அமைப்பு!**
**சென்னை மாவட்டக் கழகப் பிரதிநிதி !**
**பொதுக்குழு உறுப்பினர்!**
**தலைமைச் செயற்குழு உறுப்பினர்!**
**இளைஞரணி குழுவில் உறுப்பினர்!**
**இளைஞரணி மாநில அமைப்பாளர்!**
**இளைஞரணி மாநிலச் செயலாளர்!**
**கழக துணைப் பொதுச்செயலாளர்!**
**கழகத்தின் பொருளாளர்!**
**கழகத்தின் செயல் தலைவர்!**
**மாபெரும் இயக்கத்தின் தலைவர்!**
**தமிழ்நாடு முதலமைச்சர்!**

படிப்படியாக பல பொறுப்புகளும், அவர் கடந்து வந்த பாதையும் இன்னும் பலவற்றை நமக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டே இருப்பதற்கு உதாரணம்தான் இந்த நிகழ்வுகள்.

“ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது” என்ற சொற்றொடருக்கு பெயர்போன மயிலாடுதுறை மாவட்டத்தில் 15.07.2025, 16.07.2025 ஆகிய இரண்டு நாட்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகள். தி.மு.க.ழகத்தின் 60 ஆண்டு கால வரலாற்றையும் அதில் நம் தலைவரின் தொடர் பயணத்தையும் நினைவூட்டும் வகையில் அமைந்தன.

ஜூலை 15ஆம் தேதி பிற்பகல் 12 மணியளவில் தமிழ்நாடு முதல்வர் - கழகத் தலைவர் அவர்களின் முதல் நிகழ்ச்சி மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடம் மேற்கு ஒன்றியம், சோதியக்குடியில் மயிலாடுதுறை மாவட்டம் இதுவரை கண்டிராத எழுச்சியான வரவேற்பு தலைவருக்கு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கொள்ளிடம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் செல்ல.சேது. இரவிக்குமார் அவர்களின் முழு ஏற்பாட்டில் அவர் முன்னின்று நடத்திய விழாவில் 64 அடி உயர கொடிக்கம்பத்தில் கழக இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலையினை முதல்வர் அவர்கள் திறந்து வைத்த போது இயக்கத் தொண்டர்களும், கழக முன்னோடிகளும் எழுப்பிய ஆரவாரமும், கரவொலியும் விண்ணை பிளந்தது, மெய்சிலிர்க்க வைத்தது.

இது ஒருவரி செய்தியோ சாதாரண கழக





நிகழ்ச்சியோ அல்ல. இதற்கு பின்னால் இயக்கத்தின் வரலாறு பொதிந்து கிடக்கிறது. இந்த நிகழ்ச்சியை முன்னின்று நடத்திய செல்ல. சேது. இரவிக்குமாரின் தந்தை செல்ல.சேது ராமனும், அன்றைய ஒருங்கிணைந்த கொள்ளிடம் ஒன்றியக் கழகத்தின் செயலாளர் ஒன்றியப் பெருந்தலைவர்-செயல் வீரன் வை.மகாலிங்கமும் 11.09.2003 அன்று விரும்பத்தகாத ஒரு செயலால் மறைந்து போயினர். அந்த இருவரின் மறைவிற்கு விழுப்புரம் மாவட்டத்தில் சுற்றுப் பயணத்தில் பங்கேற்றிருந்த நம் தளபதி அவர்கள் அதனை ரத்து செய்துவிட்டு உடனடியாக வருகைதந்து இரண்டு குடும்பங்களின் துக்க நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு தனது ஆற்றொண்ணா துயரத்தை அக்குடும்பத்திற்கு நேரில் தெரிவித்தார்கள். அந்த மறைந்த சேது ராமனின் மகன்தான் 22 ஆண்டுகளாக ஒன்றியக் கழகத்தின் செயலாளராக தொய்வின்றி கழகப் பணியாற்றி வரும் செல்ல.சேது.இரவிக்குமார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்ல சோதியக்குடி சிலை திறப்பு நிகழ்விடத்தில் சுமார் 22 வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞன் தலைவரை சந்தித்தே ஆக வேண்டும் என்று ஆர்வத்தோடு காத்திருந்தார். அவருடைய ஆர்வ மிகுதியை பார்த்து நீங்கள் யார் என்று கேட்டேன். நான் வை. மகாலிங்கத்தின் மகன் என்றார். தலைவர் வந்திறங்கியவுடன் தாயை தேடிவந்த கன்றை போல அங்கே இருந்தவர்களை தள்ளிவிட்டு ஒரு சால்வையை கொண்டுவந்து தலைவரின் கையிலே கொடுத்து வாழ்த்துப் பெற்றார். அருகில் இருந்த நான் தலைவரிடத்தில் இவர்தான் மறைந்த கொள்ளிடம் வை.மகாலிங்கத்தின் மகன் நவீன் என்று சொன்னேன். சொல்லிய நொடியில் அவரை வாஞ்சையோடு பார்த்து ஆரத்தழுவிய தலைவர் அவர்கள் ஒருகணம் நெகிழ்ந்து போனார். அந்தக் காட்சி சிறிதுநேரம் நிகழ்விடத்தின் போக்கையே மாற்றி அனைவரையும் நெகிழ வைத்தது. காரணம் 2003ல் வை.மகாலிங்கம் மறைந்த போது ம.நவீன் இரண்டு வயது குழந்தை என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. ஆண்டுகள் பல ஓடினாலும் கழக குடும்பங்களின் இரத்த நாளங்களும், கொள்கை உணர்வுகளும் தலைமையையும், தலைவரையும் மட்டுமே பின்னிக் கிடக்கிறது என்பதற்கு இதுபோன்ற ஆயிரக்கணக்கான உதாரணங்கள் கழகத்தில் உண்டு என்பதற்கு இது சான்று.

25 ஆண்டுகள் உருண்டோடினாலும் மயிலாடுதுறை மாவட்ட எல்லையில் கொள்ளிடம் புறவழிச்சாலையில் கம்பீரமாக நிற்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலையும், இருவண்ண கொடிதாங்கி செம்மாந்து நிற்கும் கொடி மரமும், வை.மகாலிங்கத்தையும், செல்ல. சேதுராமனையும் நினைவுப் படுத்திக் கொண்டே இருக்கும் நினைவு கொடி மேடை.

ஜூலை 15 அன்று மாலை 5.00 மணியளவில் சீர்காழி கிழக்கு ஒன்றியம், செம்பதனிருப்பு ஊராட்சியில் புறவழிச் சாலையில் ஒன்றியக் கழகச் செயலாளர் பஞ்சு குமார் அவர்களின் ஒருங்கிணைப்பில் முத்து. தேவேந்திரன், முத்து.மகேந்திரன், ஜி.என். ரவி, எம்.என்.ஆர். செழியன், எல். கோபி இரவி, முருகன், சின்னப்பெருந்தோட்டம் இரவி ஆகியோரின் பங்களிப்பில் உருவான முத்தமிழறிஞர் தமிழினத்தலைவர் கலைஞர் அவர்களுடைய திருவுருவச் சிலையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து மரியாதை செய்தார்கள்.

ஜூலை 15 அன்று மாலை 7.00 மணியளவில், 17.09.1969ஆம் ஆண்டு அன்றைய மாயவரத்தின் கழக சூரியன் வெற்றியின் முன்னாள் எம்.எல்.ஏ. நாயகன் என்.கிட்டப்பா அவர்களின் தலைமையில் என்.வி. நடராஜன், மன்னை ப.நாராயணசாமி, ஆ.செங்குட்டுவன் ஆகியோரது முன்னிலையில் முத்தமிழஞர் கலைஞர் அவர்களின் திருக்கரத்தால் மன்றம் அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர் 12.09.1975ஆம் ஆண்டு ஆர்.. பழனிச்சாமி அவர்களின் தலைமையில், கோ.இரத்தின வேலு அவர்களின் முன்னிலையில், தம்பி ஏ.தேவேந்திரன் அவர்கள் கொடியேற்ற மன்ற அமைப்பாளர் திருவாளர் என்.கிட்டப்பா அவர்களின் பெருமுயற்சியால் உருவாகி தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க கழக அலுவலகமாம் அண்ணா பகுத்தறிவு மன்றத்தின் வாயிலில் நகரக் கழகச் செயலாளர், நகர மன்றத் தலைவர் குண்டாமணி (எ) என். செல்வராஜின் முழு ஏற்பாட்டில் வழக்கறிஞர் சங்கரநாராயணன், வழக்கறிஞர் இராம. சேயோன், மார்க்கெட் கணேசன் ஆகியோரின் பங்களிப்பில் 64 அடி உயர கொடிக்கம்பத்தில் இருவண்ணக் கொடியேற்றி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்து முதல்வர் அவர்கள் மரியாதை செய்தார்கள். இந்த கலைஞரின் திருவுருவச் சிலையும், கொடி மரமும் அமைந்துள்ள அண்ணா பகுத்தறிவு மன்ற இடத்திற்கான வரலாறு நீண்ட நெடியது.

பகுத்தறிவு மன்றத்தை பார்வையிட்ட தலைவர் அவர்கள் ஒரு நிழற்படத்தினை வாஞ்சையோடு பார்த்துக்கொண்டே இருந்தார். அந்தப் படம் அன்றைய நகர இளைஞரணியின் அமைப்பாளர் செயல்மறவர் அமரர் முத்து.சண்முகம் அவர்களின் நிழற்படம் அதனை 02.02.1992 ஆம் ஆண்டு கழக இளைஞரணியின் செயலாளராக இருந்த போது நம்முடைய தலைவர் தளபதி அவர்கள் இதே மன்றத்திற்கு வருகைதந்து திறந்து வைத்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தி.மு.கழகம் எத்தனையோ இடையூறுகளை சந்தித்து வளர்ந்த இயக்கம் என்பது வரலாறு, அதைபோல அண்ணா பகுத்தறிவு மன்றத்திற்கும் ஒரு ஆபத்து குறுக்கிட்டது. இந்த மன்றத்தை கைப்பற்ற 1993ஆம் ஆண்டு சிலர் முழு வீச்சில் இறங்கிய நேரத்தில் அதனை முறியடிக்கும் வகையில் நெடிய சட்டப்போராட்டம் நடத்தி மன்றம் தி.மு.க.வின் அசையா சொத்து என்று எனது தந்தையும் தற்போதைய திமுகவின் உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான குத்தாலம் பி. கல்யாணம், மூத்த வழக்கறிஞர் அய்யா முருகு. மாணிக்கம், அன்றைய நகரக் கழக பொறுப்பாளர் அப்துல் அஜீஸ் ஆகிய மூவரும் போராடி மன்றம் திமுகவிற்கே சொந்தம் என்ற நிலையான தீர்ப்பை பெற்றுத் தந்தது மயிலாடுதுறை நகரக் கழகத்தின் வரலாற்றில் ஒரு மைல்கல்.

அப்படிப்பட்ட வரலாற்று சரித்திரம் கொண்ட பகுத்தறிவு மன்றத்தின் நிகழ்வுகள் என்பது இன்று நேற்றல்ல மயிலாடுதுறை மாவட்டத்திற்கும், நம் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கும் 32 ஆண்டு கால தொடர்பு என்பதை இந்த நிகழ்வுகள் உணர்த்திக்கொண்டே இருக்கும்.

ஜூலை 16 அன்று காலை 10 மணியளவில் குத்தாலம் ஒன்றியம், வழுவூர் ஊராட்சியில் மயிலாடுதுறை திருவாரூர் பிரதான சாலை முகப்பில் திராவிடத்தின் திருவிளக்கு முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை குத்தாலம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் செயல் மறவர் மங்கை எம்.சங்கர் மேற்பார்வையிலும், ஒருங்கிணைப்பிலும் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வி.எஸ்.பிரபாகரன் முழு ஏற்பாட்டிலும், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் கே.மகேந்திரன் பங்களிப்பிலும் முதல்வர் அவர்கள் திறந்து வைத்து மரியாதை செய்தார்கள்.

முதல்வர் அவர்கள் வழுவூரில் வந்து இறங்கிய போது எனது தந்தை குத்தாலம் பி.கல்யாணம் தலைவரிடம் சொன்னார்கள், தங்களுக்கு நினைவிருக்கிறதா 04.03.1995 ஆம் ஆண்டு என்னுடைய ஏற்பாட்டில் இதே ஊருக்கு தாங்கள் வருகைதந்து பொதுக்கூட்டம் பேசினீர்கள் என்று சொன்னபோது தலைவரின் முகத்தில் அப்படியொரு எல்லையில்லா மகிழ்ச்சியை காண முடிந்தது.

வழுவூர் திருவுருவச் சிலை திறப்பில் தளபதி அவர்களின் இயக்க பயணத்தில் 30 ஆண்டுகளுக்கு முந்தைய நிகழ்வு நிழலாடுகிறது. அன்றைய ஒருங்கிணைந்த குத்தாலம் ஒன்றியத்தில் வழுவூர் ஊராட்சியில் 04.03.1995ஆம் ஆண்டு அன்றைய ஒன்றியச் செயலாளராக பணியாற்றிய எனது தந்தை குத்தாலம் பி.கல்யாணம் அவர்கள் தளபதி அவர்களை அழைத்து வந்து கழகத்தின் இருவண்ண கொடியேற்று விழா மற்றும் பொதுக்கூட்டமும் நடத்தினார்கள். அப்போது அ.தி.மு.க. ஆட்சி காலம், ம.தி.மு.க. பிரிந்த நேரம், அ.தி.மு.க. சற்று ஆதிக்கம் செலுத்திய வழுவூர் ஊராட்சியில் எத்தனையோ தடைகளை கடந்து கூட்டம் மிக சிறப்பாக நடந்தேறியது என்பது குத்தாலம் ஒன்றியக் கழக வரலாற்றில் மறக்க முடியாத ஒன்று.

அந்த நிகழ்வில் தளபதியார் அவர்களுடன் அன்பில் பொய்யாமொழி, நாகை அசோகன் ஆகியோரும் கலந்துகொண்டனர். ஒரு கணம் எண்ணி பார்க்கிறோம். அவ்வளவு இடையூறுகளுக்கு மத்தியிலும் கூட்டத்திற்கு வருகைதந்த தளபதி அவர்கள் 30 ஆண்டுகளுக்கு பிறகு அதே ஊருக்கு மாபெரும் இயக்கமான தி.மு.கழகத்தின் தலைவராக தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக வருகை தந்தது சாதாரண பரிணாம வளர்ச்சி அல்ல, வரலாற்றுப் பதிவு, ஓய்வறியாத உழைப்பின் உன்னதம், ஊக்கத்தின் பிறப்பிடம், உயர்வின் அடையாளம் நம் உயிரினும் மேலான தலைவர் அவர்கள்.

அவரை விமர்சனம் செய்யும் சில அற்பதர்களுக்கும், அரைவேக்காட்டு கூட்டத்திற்கும் இந்த நிகழ்வுகள் என்ன சொல்கிறது என்றால் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற மகத்தான தலைவன் தொட்டில் செடியல்ல. சமூகத்திற்கு வெளிச்சம் தர வந்து விதையாக இயக்கத்தில் விழுந்து இன்று தமிழ்நாடு காக்கும் விருச்சமாகவும் வீணர்களை விரட்டும், வீறுகொண்டு எழுந்து நிற்கும் கொள்கை வீரராகவும், கழகத்தின் உயிர் மூச்சான மாநில சுயாட்சி எனும் கொள்கையை பாதுகாக்கும் தகத்தகாய கதிரவனாக விளங்குகிறார் என்பதையும் அவர்களின் சிற்றறிவிற்கு உணர்த்துகிறது.

ஜூலை 16 அன்று காலை மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க முத்தாய்ப்பான அறிவிப்பாகும். நான் கடந்த 2021ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதல்வரிடம் தொடர்ந்து வலியுறுத்திய கோரிக்கையை மீண்டும் 07.07.2025 அன்று முதலமைச்சர் அவர்களை சென்னையில் சந்தித்து கோரிக்கையினை கொடுத்தேன். அதனைத்தொடர்ந்து 09.07.2025 அன்று முதலமைச்சர் அவர்களின் திருவாரூர் வருகையின்போது அங்கேயும் எனது கோரிக்கையினை வலியுறுத்தினேன். அதன் விளைவாக மண்டலப் பொறுப்பாளர் அமைச்சர் கே.என்.நேரு அவர்களும், மயிலாடுதுறை மாவட்ட பொறுப்பு அமைச்சர் அண்ணன் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோரின் பரிந்துரையுடனும் இந்த மகத்தான அறிவிப்பை முதலமைச்சர் அவர்கள் அரசு நிகழ்ச்சியில் வெளியிட்டார்கள்.

தென்னாப்பிக்காவில் சத்யாகிரக போராட்டத்தில் அண்ணல் காந்தியடிகளுடன் கலந்து கொண்டபோது சிறைக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு உயிர் நீத்த முதல் சுதந்திர போராட்ட வீரர் இளமையிலேயே உயிர் தியாகம் செய்த தீரர், மயிலாடுதுறை மண்ணின் மைந்தர் தியாகி சாமி.நாகப்ப படையாட்சி அவர்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் சிலை அமைக்கப்படும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாடு போற்றும் செய்தியாக மாறிப்போனது.

தியாகி சாமி.நாகப்ப படையாட்சி சிலை அமைக்கப்பட வேண்டுமென்பது ஓராண்டு, ஈராண்டு அல்ல அறுபது ஆண்டுகால கோரிக்கை. எத்தனையோ தரப்பினர் பல்வேறு வழிகளில் ஆண்டாண்டு காலமாக முயற்சித்தும் நிறைவேறாத கோரிக்கையை எனது தொடர் வேண்டுகோளை ஏற்று தாயுள்ளத்தோடு பரிசீலித்து நிறைவேற்றி தந்திருக்கும் முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய செய்தி என்பதை பதிவு செய்கிறேன். மொத்தத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தில் முதலமைச்சரின் இரண்டு நாள் சுற்றுப்பயண நிகழ்ச்சி இயக்கத்தின் பன்நெடுங்கால வரலாற்றின் பிரதிபலிப்பாக அமைந்துவிட்டது.

தி.மு.கழக ஆட்சியில் குறை சொல்ல ஒன்றும் கிடைக்காததால் திராவிட முன்னேற்றக் கழகத்தில் வாரிசு அரசியல், குடும்ப அரசியல் என்று ஊர் ஊராக சென்று பிதற்றும் வக்கற்றவர்களுக்கு தலைவர் அவர்கள் பங்கேற்ற இந்த நிகழ்ச்சிகளே பதில் கூறும்.

இது குடும்ப அரசியல் அல்ல வாழையடி வாழையாக தலைமை முதல் இயக்கத்தின் கடைகோடி தொண்டனின் குடும்பம் வரை கழகக் கொடியை தொடர் ஓட்டமாக உயர்த்தி பிடிப்பது வாரிசு என்றால் அது தொய்வின்றி தொடரும்! தொடரும்!! இளைஞர்களே வாருங்கள் வலுசேர்ப்போம்! கழகத்தின் ஆலம் விழுதுகளாய்!!

வாழ்க திராவிடம்..... வெல்க தி.மு.க...

**குத்தாலம் க.அன்பழகன்**
கழக கொள்கைப் பரப்பு
துணைச் செயலாளர்



---

தமிழ்நாட்டிலுள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில்

## தமிழாசிரியர்களை நியமிக்காதது ஏன்?

### மக்களவையில் கலாநிதி வீராசாமி கேள்வி



புதுடெல்லி, ஜூலை 30-

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி மக்களவையில் கேள்வி நேரத்தின் போது, தமிழ்நாட்டில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் நிரந்தர தமிழ் ஆசிரியர்கள் இல்லாத நிலைமை பற்றி கேள்வி எழுப்பினார். தற்போது 86 ஹிந்தி ஆசிரியர்களும் 65 சமஸ்கிருத ஆசிரியர்களும் பதவியில் உள்ள நிலையில், தமிழாசிரியர்கள் ஏன் நியமிக்கப்படவில்லை என்பதைத் தொடர்ந்து, இது மொழி சமத்துவத்தையும் மாணவர்களின் அடிப்படை உரிமைகளையும் பாதிக்கிறதா எனவும் கேள்வி எழுப்பினார்.

மேலும், நிரந்தர தமிழாசிரியர்களை நியமிக்க ஒன்றிய அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன? இதற்கான தீர்வுகள் மற்றும் எதிர்கால திட்டங்களை விவரிக்கக் கோரினார்.

---

செஞ்சி ஒன்றியம் கடலாடி குளத்தில்

## “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

### முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்! ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை!

செஞ்சி, ஜூலை 30-

செஞ்சி ஒன்றியம்கடலாடி குளம் கிராமத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமைமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள ‘உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் சிதம்பரத்தில் கடந்த 15 ஆம் தேதி முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கடலாடி குளம் கிராமத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெற்றது.

ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட ஊராட்சி செயலர் நடராஜன் முன்னிலை வகித்தார் வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அனைத்துத் துறை சார்பில்பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து வேளாண்மைதோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்குபழ மரக்கன்றுகளையும் விதைகளையும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விவசாயிகளுக்கு வழங்கினார்.

முகாமில் செம்மேடு, புதுப்பாளையம் ,பாக்கம் சே.பேட்டை ஆகிய கிராமங்களிலிருந்து ஏராளமான பொதுமக்கள் வருகை தந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினர்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன். வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபா சங்கர், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய கவுன்சிலர்கள் சாவித்திரிகோவிந்தராஜன், புவனா செந்தில் குமரன், டிலைட் ஆரோக்கியராஜ், ஊராட்சி மன்ற தலைவர்கள் நீலாவதி பஞ்சாட்சரம், அஞ்சலை செல்வகுமார், காசிநாதன், சந்தானம்,உள்ளிட்டதுறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பழனிஅனைவருக்கும் நன்றி கூறினார்.

---

## துறைமுகம் பகுதியில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஜூலை 30-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுத கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 159 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (28.7.2025) துறைமுகம் கிழக்கு-மேற்கு பகுதி: 1) வட்டம் 54ஆ, வால்டாக்ஸ் ரோடு உட்வார்ப் 4 வது கேட் அருகில் (அம்மன் கோயில் எதிரில்). 2) வட்டம் 56, பிடாரி யார் கோயில் தெரு, சண்முகராயன் தெரு சந்திப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி. ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி. எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, விஜய குமார், எல். சம்பத்குமார், பா.பிரதாப்கு மார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம், ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராம மூர்த்தி, பா. அண்ணா துரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.